1979 மார்ச் 7]

கோத்தகிரி சோலூர் மட்டம் சாலை

*வினா எண் 271— திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதி கோத்தகிரியிலிருந்து சோலூர் மட்டம் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையினர் ஏற்று சீர்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சாலை ஏற்கனவே அரசினால் மேற்கொள்ளப்பட்டு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இச்சாலையின் மேம்பாட்டு பணிகளை மாநில சாலைத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டக் காலங்களில் வேலைகளின் பட்டியலில் நிதியினம் வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து சேர்க்க பரிசீலனை செய்யவேண்டும். இதுவரை இச்சாலை மேம்பாட்டு வேலைகள் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி நிலைக்கு ஏற்ப எடுத்து செய்யப்படும்.

ஊராட்சிகளில் விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்

*வினா எண் 272— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊராட்சியிலும் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒவ்வொரு ஊராட்சியிலும் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. ம.ா. மணிமாறன்: விவசாயிகள் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். ஒழுங்காக சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு முன்னால் கொடுக்கப்பட்ட திட்டந் தான் தற்போது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மறு பரிசீலனை செய்து அதிக உற்பத்தி செய்கிறவர்களுக்கு பரிசு கொடுக்க அரசு முன்வருமா ?